.

**இணைப்பு 'B'**
**திகதி 2019.07…..**
**இலக்கம் MOD/FD/DG(A&F)/AQ/19 கொண்ட கடிதம**

**பாராளுமன்ற தொடர் இலக்கம் :** **- 76**
**நிறுவனத்தின் பெயர் :** **- இலங்கை விமானப்படை**

| **குழுவினால் அடையாளங்னாணப்பட்ட பலவீனங்கள் / குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள்** | **எடுக்கப்பட்ட/அமுலாக்கப்படும் பரிகாரச் செயற்பாடுகள் பரிந்துரைகள்/ தற்போதைய நிலைமை** |
|---|---|
| **பலவீனம்**<br>1. 2016 ஆம் ஆண்டில் மூலதன மதிப்பீட்டின் கீழ் தேறிய ஏற்பாட்டிலிருந்து 77.6% மீதி ஒன்றைக் குறித்துக்காட்டுதல்…<br><br>**குழு கட்டளை**<br><br>05.07.2018 க்கு முன்னர், ஏற்பாடுகளில் இந்த மீதியை ஏற்படுத்திய காரணங்கள் தொடர்பாக குழுவுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கும் ஒரு விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சுச் செயலாளருக்கு குழு கட்டளையிட்டது. | 21 மாசி 2019 திகதியிடப்பட்ட கடித இலக்கம் SLAF/2016/5/கணக்காய்வு/IAD ஆல் இது தொடர்பாக செயலாளர் , நிதி அமைச்சுக்கு அறிவிக்குமுகமாக பாதுகாப்பு அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. **இணைப்பு 'B'** |
| **பலவீனம்**<br><br>2. கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற Helitours (தனியார்) லிமிட்டட்டின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களாக அரசாங்க அலுவலகர்கள் பணிபுரிவது தொடர்பாக சட்ட அந்தஸ்து.<br><br>**குழு கட்டளை**<br><br>நிறுவனரீதியான நலனை உறுதிப்படுத்தும் அதேவேளை அந்த நிதிகளின் நிர்வாகம் தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைகளின் தளபதிகளுடன் சேர்ந்து ஒரு முறையான திட்டத்தைத் தயாரிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு குழு கட்டளையிட்டது. | (1) ஹெலிடுவர்ஸ் (தனியார்) லிமிட்டட்டின் பங்குகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு 24 தை 2018 திகதியிடப்பட்ட கடிதம் இலக்கம் : SLAF/C99/6/3/DAO ஆல் விமானப்படைத் தளபதி திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திலிருந்து ஆலோசனையைக் கேட்டுள்ளார்.( பிற்சேர்க்கை "1" ஆக இத்துடன் கடிதத்தின் பிரதி இணைக்கப்படுகின்றது).<br><br>(2) மேற்படி கடிதத்துக்குப் பதிலளித்து ,பொது முயற்சிகள் திணைக்களம் 25 ஆடி 2018 திகதியிடப்பட்ட கடிதத்தால் திறைசேரி செயலாளருக்குப் சொல்லப்பட்ட கம்பனியின் பங்குகளை மாற்றுமாறு ஆலோசனை வழங்கியுள்ளது. (பிற்சேர்க்கை "2"ஆக அந்தக் கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்படுகின்றது.).<br><br>(3) மேலும் ,திறைசேரிக்கு மாற்றப்படவேண்டிய பங்குகளின் சதவீதம் தொடர்பாக ஹெலிடுவர்ஸ் (தனியாா) லிமிட்டட் ஆலோசனை பெற்றுக்கொள்ளாதபடியால், 04 செப்டம்பர் 2018 திகதியிடப்பட்ட கடித இலக்கம் SLAF/C99/6/3/DAO ஆல் பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அதே ஆலோசனை வேண்டப்பட்டது.( பிற்சேர்க்கை "3" ஆக அக்கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்படுகின்றது.) |

| குழுவினால் அடையாளங்காணப்பட்ட பலீனங்கள்/குழுவினால் வழுங்கப்பட்ட கட்டளைகள் | எடுக்கப்பட்ட பரிகாரச் செயற்பாடுகள் /பரிந்துரைகள் அமுலாக்கல்/ தற்போதுள்ள நிலைமை |
|---|---|
| | (4) பின்னர், ஹெலிடுவர்ஸ் (தனியார்) லிமிட்டட்டின் பங்குகளை மாற்றுவது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தில் 24 தை 2019 இல் பொதுத் திணைக்களத்தில் பொதுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கும் ஹெலிடுவர்ஸ் (தனியார்) லிமிட்டட்டுக்கும் இடையில் ஆரம்பக் கூட்டம் இடம்பெற்றதுடன் அதற்கான சாத்தியக்கூறும் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் விளைவாக , இக்கூட்டத்தின் பயனாக Helitours க்கு ஏற்றவாறு ஒரு வியாபாரத் திட்டத்தை அடையாளங்காணும்முகமாக கம்பனியின் நிதி அந்தஸ்தை மீளாய்வு செய்யத்தீர்மானிக்கப்பட்டது. இதன்படி , பொது முயற்சித் திணைக்களத்தின் இரண்டு அலுவலகர்கள் 19 பங்குனி 2019 இல் ஹெலிடுவர்ஸ க்கு விஜயம் செய்து அதுபற்றி விசாரித்தார்கள்.<br><br>(5) அதன் பின்பு ஹெலிடுவர்ஸ் (தனியார்) லிமிட்டட்டுக்கும் பொது முயற்சிகள் திணைக்களத்துக்கும் இடையில் (DPE)ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய , 27 பங்குனி 2019 திகதியிடப்பட்ட கடிதக் குறிப்பு SLAF/C.99/6/3/DAO ஆல் 2019 சித்திரை 10 இல் ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு முன்மொழியப்பட்டது. ( பிற்சேர்க்கை ‘4’ ஆக கடிதத்தின் பிரதி இணைக்கப்படுகின்றது). ஒரு சேவை காரணமாக ஒரு கூட்டத்துக்கு 9 சித்திரை 2019 இல் சாத்தியமில்லை என பொது முயற்சிகள் திணைக்களத்தினால் (DPE) அறிவிக்கப்பட்டது. பிற்சேர்க்கை ‘5’ஆக கடிதத்தின் பிரதி இணைக்கப்படுகின்றது. )<br><br>(6) ஹெலிடுவர்ஸ் பணிப்பாளர் சபையின் இரண்டு அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய அலுவலகர்களும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடனும் ஏனைய தொடர்பான அலுவலகர்களுடனும் 10 வைகாசி 2019 இல் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் கீழே குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.<br><br>a. திறைசேரியின் செயலாளருக்கு கம்பனியின் பங்குகளின் முழு உரிமையையும் மாற்றுவது .<br><br>b. இலங்கை விமானப்படையின் பணிப்பாளர் சபையுடன் ஹெலிடுவர்ஸ் (தனியார்) லிமிட்டட்டின் தொழிற்பாட்டுக் கருமங்கள் மற்றும் முகாமைத்துவத்தையும் வைத்துக்கொள்வது<br><br>c ஹெலிடுவர்ஸ் (தனியார்) லிமிட்டட்டின் பணிப்பாளராக திறைசேரியின் ஒரு முகவரை நியமித்தல்..<br><br>d. குத்தகை அடிப்படையில் விமானங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை விமானப்படைக்கு ஹெலிடுவர்ஸ் (தனியார்) லிமிட்டட்டுக்குமிடையில் இணக்கப்பாடு. .<br><br>e. ஹெலிடுவர்ஸ் (தனியார்) லிமிட்டட்டின் ( மனித வளங்கள் உட்பட) எல்லா செலவுகளையும் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களினதும் பராமரிப்பையும் கணக்கீடு செய்வதுடன் ஹெலிடுவர்ஸ் (தனியார்) லிமிட்டட்டின் வருமானத்தின் சதவீதம் ஒன்றைப் பொதுக் கணக்கிற்கும் இலங்கை விமானப்படைக்கான நலம்தரும் செயற்பாடுகளுக்கும் பகிர்வு செய்தல். |

| குழுவினால் அடையாளங்காணப்பட்ட பலவீனங்கள் / குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் | எடுக்கப்பட்ட பரிகாரங்கள் /பரிந்துரைகள் அமுலாக்கல் / தற்போதுள்ள நிலைமை |
|---|---|
| **பலவீனம்**<br><br>3. ஆகாய போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக இலங்கை விமானப்படைக்கு 31.12.2017 இல் உள்ளவாறு பெற்றுக்கொள்ளவேண்டிய ரூபா.13.47 மில்லியன் நிலுவையை அறவிடுவதில் உள்ள முன்னேற்றம்.<br><br>**குழு கட்டளை**<br><br>ஆந்தந்த செயலாள்களைக் கூட்டி அந்தப் பணத்தை அறவிடுவதற்காக எடுக்கப்படவேணடிய செயற்பாட்டைக் கலந்துரையாடுவதற்காகவும் குழுவுக்கு அதை அறிவிக்கவும் நிதி அமைச்சின் செயலாளருக்கு குழு பணித்தது. | பிற்சேர்க்கை "6" ஆக ஆகாயப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக 31 மார்கழி 2017 இல் உள்ளவாறு ரூபா. 13.47 மில்லியன் நிலவையைப் மீள்பெற்றுக்கொள்வதில் முன்னனேற்ம்.. |
| **பலவீனம்**<br><br>4. 2009 ஆம் ஆண்டில் இரண்டு தனியார் கம்பனிகளிடமிருந்து 15 வருட உத்தரவாதக் காலத்துடன் ரூ.19,691,000.00 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சூரிய ஒளியில் இயங்கும் 187 தெரு விளக்குகளில் 2015 ஆம் ஆண்டில் 148 விளக்குகள் மற்றும் 33 பற்றரிகளின் பழுதுகளால் ஏற்பட்ட ரூ. 16 மில்லியன் பெறுமதியான சேதத்தினை வசூலிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br><br>**குழு கட்டளை**<br><br>தொழில்நுட்பத் தன்மை வாய்ந்த கொள்வனவொன்றிற்காக வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்யும் போது, கம்பனியின் நிலைத்தன்மை பற்றிய புரிதல் பெறப்பட வேண்டும் என்பதுடன் அதற்காக கம்பனியின் நிதி அறிக்கைகள் மீது கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என கணக்காய்வாளர் நாயகத்தினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. | (1) 2009 இல் உத்தரவாதக்காலத்தில் இலங்கை விமானப்படைக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட சூரிய ஒளியில் இயங்கும் ' வீதி விளக்குகள் உத்தரவாதக்காலத்தில் செயலிழந்தன , அந்தக் கம்பனிகள் அந்த நேரம் மூடப்பட்டன என தெரிவிக்கப்பட்டது. இலங்கை விமானப்படை பாதிபை அறவிடுவதற்கு எல்லா எடுத்தது. அந்த எல்லா முயற்சிகளும் தோற்றுவிட்டதால் அதை விசாரிப்பதற்கு ஒரு விசாரணைச் சபை நிறுவப்பட்டது. அதன் பரிந்துரைகளை விமானப்படைத் தளபதிக்குக் குறிப்பிட்டு அந்தப் பாதிப்பை மீள் அறவிடுவதற்காக அந்தக் கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பரிந்துரை செய்யப்பட்டது.மேலும் எதிர்காலத்தில் இலங்கை விமானப்படை அத்தகைய பாதிப்பு ஏற்படாதிருக்க ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.<br><br>(2) இதன்படி, 05 ஆடி 2018 இல் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அக்ஸஸ் சோலர்(தனியார்) லிமிட்டட் மற்றும் என்வைஎன் எனேஜி லங்கா (தனியார்) லிமிட்டட் என்று பெயரிடப்பட்டுள்ள அந்த இரண்டு கம்பனிகளுக்கும் கோரல் கடிதம் அனுப்புவதற்குத் தேவையான எல்லாத் தகவலையும் இலங்கை விமானப்படை சட்டப் பணிப்பாளர் சமர்ப்பித்துள்ளார். |

| குழுவினால் அடையாளங்காணப்பட்ட பலவீனங்கள் / குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் | எடுக்கப்பட்ட பரிகாரச் செயற்பாடுகள் /அமுல் செய்யப்படும் பரிந்துரைகள்/ தற்போதைய நிலைமை |
|---|---|
| **பலவீனம்**<br><br>5. கொழும்புக்கு அண்மையில் தீ அலகின் விமான ஏணிகளை வைத்துக்கொள்வதற்கு சரியான இடமின்மை .<br><br>**குழு கட்டளை**<br><br>தீர்க்கமான காரணியாக கொழும்பு நகரப் பகுதியில் நாளுக்கு நாள் கட்டப்படும் கட்டிடங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு அழுத்தம் கொடுப்பதன்மூலம் குழு பெருநகர அமைச்சு மற்றும் மேல்மாகாண அமைச்சின் செயலாளருக்கு அமைச்சு பாரிய பொறுப்பைக் கொண்டிருப்பதால் தீ அலகை ஸ்தாபிக்க ஒரு காணியை எடுக்குமாறு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை வழங்கியது என்பதுடன் குழு மேலும் ஆண்டு 2019 இன் வரவுசெலவுத்திட்ட உள்ளடக்குவதற்காக ஒரு செயற்திட்ட பிரேரணையுடன் நிர்மாணத்துக்கான தேவையான ஏற்பாட்டின் மேல் நிதி அமைச்சுச் செயலாளருக்கு பிரேரணையைச் சமர்ப்பிக்குமாறு குழு CAO/AO க்குப் பணிப்புரை விடுத்தது. | (1) 12 புரட்டாதி 2018 திகதியிடப்பட்ட கடித இலக்கம்: SLAF/15/1/Air மூலமாக 2019 ஆம் ஆண்டு வருடாந்த வருடாந்த வரவுசெலவுத் திட்டத்திலிருந்து நாரெகன்பிட்டியில் பெகரியவத்தை என்ற பெயருள்ள அரசாங்கக் காணியைப் பெற்றுக்கொள்வதற்காக நகர அதிகார சபைக்கு ரூபா.192 மில்லியன் செலுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இதில் , ரூபா 50 மில்லியன் 2019 ஆண்டில் ஆரம்பத்தில் வழங்கப்பட்டதுடன் 21 பங்குனி 2019இல் நடைபெற்ற பொது கணக்குகள் மேலான குழுவில், திறைசேரியின் பிரதிநிதிகள் மிகுதி 2020 இல் வழங்கப்படுவதற்கு இணங்கியது.<br><br>(2) மேலும் ,SLAF/477/2/ORG 29 பங்குனி 2019 திகதியிடப்பட்ட இலக்கக் கடிதம் இலங்கை விமானப்படை தீ அலகை ஸ்தாபிக்கும் நோக்கத்துக்காக நாரகென்பிட்டிச் சந்தியில் உள்ள “பெகரியவத்தை எனப் பெயருள்ள காணியைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி அமைச்சுக்கு ஒரு பிரதியுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்துக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. (பிற்சேர்க்கை ‘7’ ஆக இத்துடன் கடிதத்தின் பிரதி இணைக்கப்படுகின்றது. ) |

| குழுவினால் அடையாளங்காணப்பட்ட பலவீனங்கள்/ குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் | எடுக்கப்பட்ட பரிகாரச் செயற்பாடுகள்/அமுலாக்கப்படும் பரிந்துரைகள்/ தற்கோதைய நிலை |
|---|---|
| **பலவீனம்**<br><br>6. 04 சித்திரை 2014 இல் திருத்துதலுக்காக சீனாவுக்கு இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஒரு றாடர் பெறுதியும் ஒரு அன்ரெனா வருடியும் அனுப்பப்பட்டது. ஆனால் சொல்லப்பட்ட விடயங்கள் இடம் தவறியதால் இலங்கை விமானப் படைக்கு ரூபா. 74இ457இ100 இழக்கப்பட்டது. இருந்தும் இது தொடர்பாக பொறுப்பான பகுதியனரை அடையாளங்கண்டு பாதிப்பை அறவிடுவதற்கு குழ நடவடிக்கை எடுக்கவில்லை.<br><br>**குழு கட்டளை**<br><br>சொல்லப்பட்ட விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனை வேண்டி இலங்கை விமானப் படையால் அனுப்பப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பித்தும் சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட கடிதத்துக்கான கடிதம் மற்றும் தொடர்பான விடயம் தொடர்பாகவும் மற்றும் குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்படும் எல்லா ஏனைய விடயங்களுக்கும் இரண்டு கிழமைகளுக்குள் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையுடன் காப்புறுதி எடுக்காத அலுவலகர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் இடம் தவறியமையால் ஏற்பட்ட நட்டத்தை அறவிடவும் குழு CAO/AO க்குக் பணிப்புரை விடுத்தது. | (1) 22 ஆனி 2018 எனத் திகதியிடப்பட்ட SLAF/C438/23/சட்டம் இலக்கக் கடிதத்தினூடாக( '8'பிற்சேர்கையாக கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்படுகின்றது. ) COPAக்கு இது தொடர்பான ஒரு விரிவான அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.<br><br>(2) சீனாவுக்கு விமானமூலம் அனுப்பப்படும் செய்யொழுங்கின்போது இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான றாடர் பெறுதியும் அன்ரெனா வருடியும் இடம் தவறியமை தொடர்பாக , நடத்தப்பட்ட விசாரணையின் பின் விமானப்படைத் தளபதிக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளின்பின் சொல்லப்பட்ட விடயத்துக்கான காப்புறுதியை பெற்றுக்கொள்ளாமைக்கான பொறுப்பு அலுவலகரான படையணித் தலைவர் HSPK பர்னாந்துவிடமிருந்து முழுப்பெறுமதியிலிருந்து 0.5% ஆன ரூபா. 493,438.38, அறவிடுமாறும் எச்சரிக்கைக் கடிதத்தையும் அனுப்புமாறும் படைத் தளபதி பரிந்துரை செய்தார் சீனாவுக்கு அனுப்புவதற்கு பொறுப்பெடுத்த கம்பனியான M/s Care Logistics (Pvt) லிமிட்டட்டிடமிருந்து மிகுதி பாதிப்புக்கு ரூபா.98,194,092.87, அறவிடுமாறும் கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரை செய்தார்.<br><br>(3) மேலும் COPA ஆல் வழங்கப்பட்ட கட்டளையின்படி M/s Care Logistics (Pvt) லிமிட்டட் என்ற பெயரிடப்பட்ட கம்பனியை வேறு ஏதாவது அரசாங்க நிறுவனத்துடன் கொடுக்கல்வாங்கலைத் தடை செய்வதுடன் சொல்லப்பட்ட கம்பனியை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவிக்கப்படுகின்றது.<br><br>(4) தற்சமயம் இந்தக் கம்பனி தொடர்பாக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் விசாரணை அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**<u>பிற்சேர்க்கை 01</u>**
**<u>திகதி 2019.07…..</u>**
**இலக்கம் MOD/FD/DG(A&F)/AQ/19 கொண்ட கடிதம**

SLAF/C.99/6/3/DAO 2018 சனவரி 24

பணிப்பாளர் நாயகம்
அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்
திறைசேரித் திணைக்களம்
லோட்டஸ் வீதி
கொழும்பு 01

**<u>கம்பனிப் பங்குகளின் உரிமைக் கூட்டமைவு</u>**
**<u>ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (PV 72768)</u>**

தொடர்புகள் :

A. COPA குழு அறிக்கை திகதி : 2016 யூன் 24
B. S17/REP/2016 திகதி : 2016 அக்டோபர் 31
C. S17/01/Com/Aud/2016-11/16 திகதி : 2017 சனவரி 06
D. பிரதிக் கணக்காய்வாளர் நாயகத்துடனான கூட்டம் - 2017 நவெம்பர் 29, இலங்கை விமானப் படைத் தலைமையகத்தில்
E. SLAF/165/5/DAO திகதி : 2017 டிசெம்பர் 08
F. SLAF/165/5/DAO திகதி : 2017 டிசெம்பர் 20
G. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் - 2017 டிசெம்பர் 27

1. ''ஹெலிடுவர்ஸ் விமானச் செயற்பாடுகள்'', பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 1973 ஏப்ரல் 27 ஆந் திகதியிடப்பட்ட D.282/TRG இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை விமானப் படையின் ஒரு வர்த்தகப் பிரிவாக இருந்தது. அதனைத் தொடர்ந்து, கம்பனிகள் பதிவாளரிடம் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பிரைவேட் லிமிட்டெட் கம்பனி ஒன்றாக 1994 யூலை 21 ஆந் திகதி ''ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட்'' பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க புதிய கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பிரைவேட் லிமிட்டெட் கம்பனியாக 2010 யூலை 17 ஆந் திகதி கம்பனியானது மீள்பதிவு செய்யப்பட்டது. (பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

2. கம்பனியின் தற்போதைய பணிப்பாளர்கள் சபை இலங்கை விமானப் படையின் பின்வரும் அதிகாரிகளை உள்ளடக்கியுள்ளது.

தம்பரே லியனகே சுமங்கல டயஸ்
சுதர்சன கரகொட பத்திரண
அலெஸ்டர் மோகன் த சொய்சா
குருகுலசூரிய பிரான்சிஸ் ரோஹிந்த பெர்னாண்டோ
அன்ட்ரூ வேன் எதிரிவீர விஜயசூரிய
மஹிலால் துஸ்யந்த இரத்நாயக்க

3. மேலுள்ளவர்களுள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் அவர்களுடைய தனிப்பட்ட பெயர்களில் கம்பனியின் பங்குதாரர்களாக இருப்பதுடன் அவர்களின் பங்குத் தொகைகள் அவர்களது ஒவ்வொருவரினது பெயருக்கு எதிரேயும் குறிப்பிடப்பட்டுள்ளது.

| **பங்காளர்கள்** | **பங்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| டி.எல்.எஸ். டயஸ் | 50,001 |
| எஸ்.கே. பத்திரண | 01 |
| கே.எப்.ஆர். பெர்னாண்டோ | 01 |
| எம்.டி. இரத்நாயக்க | 01 |

4. COPA அறிக்கையின்படி (தொடர்பு "A"), அரசாங்க அதிகாரிகள் ஹெலிடுவர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டில் நியமனங்களைக் கொண்டிருப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

5. அரசியலமைப்பின் 19 ஆம் திருத்தம் மற்றும் அரசியலமைப்பின் 154(4)(a) உறுப்புரை ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க, அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல கம்பனிகளினதும் கணக்காய்வினை கணக்காய்வாளர் நாயகம் மேற்கொள்ள வேண்டும் என்பதால் அது தொடர்புகள் "B" மற்றும் "C" ஊடாகத் தெரியப்படுத்தப்பட்டது.

6. பிரதிக் கணக்காய்வாளர் நாயகத்துடன் இலங்கை விமானப் படைத் தலைமையகத்தில் 2017 நவெம்பர் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில், ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இன் மொத்த வருமானமும் திறைசேரிக்கு வரவு வைக்கப்படுகின்ற அதே வேளை திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்படும் அரச நிதிகள் ஊடாக அதன் நிதிசார் தேவைகள் ஈடுசெய்யப்படுகிறது என்பதால் ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் என்பது அரசாங்கத்திற்குச் சொந்தமானதொரு கம்பனி என்பதை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வாளர் நாயகத்திற்கு எழுத்துமூல ஆவணம் ஒன்றைச் சமர்ப்பிப்பது அவசியமானதாக இருந்தது. எனவே இத்தலைமையகமானது தொடர்பு "E" இன் மூலம் இந்த விடயம் மீதான ஆலோசனையைப் பெறும் பொருட்டு தங்களது திணைக்களத்துடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பமொன்றை ஏற்கனவே கோரியிருந்தது.

7. அதனைத் தொடர்ந்து, அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனி ஒன்றாக ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இன் நிலையினை உறுதிப்படுத்துவதை நோக்கிய சிறந்த நடவடிக்கை ஒன்றைத் தீர்மானிக்கும் பொருட்டு தங்கள் திணைக்களத்துடன் இத்தலைமையகம் தொடர்பாடியிருந்தது என்பது கணக்காய்வாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

8. மேலும், 2017 டிசெம்பர் 27 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில், இலங்கை விமானப் படையின் உள்ளகக் கணக்காய்வாளர் (சிவில்), கணக்காய்வாளர் நாயகத்தினால் ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (2016/2017) இன் கணக்குக் கூற்றுகளை சான்றுப்படுத்தும் பொருட்டு, திறைசேரியிலுள்ள அரச பொதுமுயற்சிகள் திணைக்களத்திற்கு குறிப்பிட்ட சதவீதமான பங்குகள் மாற்றப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

9. எனவே, நடப்பு நிலைமைக்குத் தீர்வுகாணும் பொருட்டும் கம்பனியின் நிதிசார் மற்றும் கணக்கீட்டுப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும் தங்களுடைய ஆலோசனை நாடப்படுகிறது.

கே.வி.பி. ஜயம்பதி
WWV,RWP, RSP and three Bars, fndu (China), qhi
எயார் மார்ஷல்
விமானப் படைத் தளபதி

**<u>பிற்சேர்க்கை 02</u>**
**<u>திகதி 2019.07…..</u>**
**இலக்கம் MOD/FD/DG(A&F)/AQ/19 கொண்ட கடிதம**

2018.07.25

எயார் மார்ஷல்
விமானப் படைத் தளபதி

ஐயா,

**<u>கம்பனிப் பங்குகளின் உரிமைக் கூட்டமைவு – ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (PV72768)</u>**

தங்களின் SLAF/C.99/6/3/DAO இலக்கமும் 2018.01.24 ஆந் திகதியும் கொண்ட கடிதம் மற்றும் மேலுள்ள விடயம் தொடர்பாக தங்களுடைய அதிகாரிகளுடன் நிகழ்த்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் பல தொலைபேசி உரையாடல்கள் தொடர்பாக,

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் உறுப்புரை 4(2) இன் படி, அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகளின் பங்குகளைத் தனியாகவே வைத்திருப்பதற்கு திறைசேரிச் செயலாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த முதலீடுகள் இலங்கைத் தேசிய கணக்குகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கணக்காய்வாளர் நாயகம் தேசிய கணக்குகளில் குறிப்பிடப்படாத அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை அங்கீகரிப்பதில் பிரச்சினைகளைக் கொண்டிருக்கலாம் என்பதுடன் அரச முதலீடுகளாக அரச பணத்தைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பவற்றில் பிரச்சினைகளுக்கும் வித்திடலாம்.

எனவே, பங்குகளை மாற்றுவதற்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றதன் பின்னர் உடனடியாக திறைசேரிச் செயலாளருக்கு பங்குகளை மாற்றுவதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு தங்களைக் கேட்டுக் கொளய்கின்றேன்.

உண்மையுள்ள

ஒப்பம் : என்.கே.ஜி.கே. நெம்மாவத்த
பணிப்பாளர் நாயகம்

பிரதி : செயலாளர், பாதுகாப்பு அமைச்சு

**பிற்சேர்க்கை 03**
**திகதி 2019.07…..**
**இலக்கம் MOD/FD/DG(A&F)/AQ/19 கொண்ட கடிதம**

SLAF/C.99/6/3/DAO 2018 செப்ரெம்பர் 04

பணிப்பாளர் நாயகம்
அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்
திறைசேரித் திணைக்களம்
லோட்டஸ் வீதி
கொழும்பு 01

**கம்பனிப் பங்குகளின் உரிமைகளது கூட்டமைவு**
**ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (PV 72768)**

தொடர்புகள் :

A. COPA குழு அறிக்கை 2016 யூன் 24
B. S 17/REP/2016 2016 அக்டோபர் 31
C. S 17/01/Com/Aud/2016-11/16 2017 சனவரி 06
D. பிரதிக் கணக்காய்வாளர் நாயகத்துடனான கூட்டம் - 2017 நவெம்பர் 29, விமானப் படைத் தலைமையகத்தில்
E. SLAF/165/5/DAO 2017 டிசெம்பர் 08
F. SLAF/165/5/DAO 2017 டிசெம்பர் 20
G. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் - 2017 டிசெம்பர் 27
H. அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்திடமிருந்தான கடிதம் - 2018 ஆகஸ்ட் 25

1. மேலுள்ள தொடர்பு இல. H இன் மூலம் அறிவுறுத்தப்பட்டவாறு, அரசுக்குச் சொந்தமான கம்பனி ஒன்றாக ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட்டினை மாற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக திறைசேரிச் செயலாளருக்கு ஹெலிடுவர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டின் பங்குகள் மாற்றப்பட வேண்டும்.

2. எவ்வாறாயினும், கம்பனிப் பங்குகள் மாற்றப்படுகின்ற சதவீதமானது மேலேயுள்ள தொடர்புக் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. இதன் காரணமாக, இத்திணைக்களம் திறைசேரிச் செயலாளருக்கு 51% மான பங்குகளை மாற்றுவது பற்றியும் மீதி 49% மான பங்குகளைத் தொடர்ந்தும் இலங்கை விமானப் படையில் வைத்திருப்பது பற்றியும் கவனம் செலுத்துகிறது.

3. எனவே, இவ்விடயம் தொடர்பில் தங்களது ஆலோசனை நாடப்படுகிறது.

ஒப்பம் : கே.வி.பி. ஜயம்பதி
WWV, RWP,RSP and three Bars, VSV, LSP, MMSc (trat stu-China), fndt (China), qhi
எயார் மார்ஷல்
விமானப் படைத் தளபதி

**<u>பிற்சேர்க்கை 04</u>**
**<u>திகதி 2019.07…..</u>**
**இலக்கம் MOD/FD/DG(A&F)/AQ/19 கொண்ட கடிதம**

SLAF/C.99/6/3/DAO 2019 மார்ச் 27

பணிப்பாளர் நாயகம்
அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்
திறைசேரித் திணைக்களம்
லோட்டஸ் வீதி,
கொழும்பு 01.

**<u>கம்பனிப் பங்குகளை திறைசேரிக்கு மாற்றுதல்</u>**
**<u>ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (PV 72768)</u>**

தொடர்புகள் :

| | | |
|---|---|---|
| A. | SLAF/165/5/DAO, | திகதி 2018 சனவரி 24 |
| B. | SLAF/165/5/DAO | திகதி 2018 செப்ரெம்பர் 08 |
| C. | DPE யினால் அனுப்பப்பட்ட கடிதம் | திகதி 2018 யூலை 25 |
| D. | DPE அதிகாரிகளுடனான கூட்டம் | - 2019 சனவரி 24 |
| E. | DPE அதிகாரிகளுடனான கூட்டம் | - 2019 மார்ச் 19 |
| F. | COPA குழு – 2019 மார்ச் 21 | |

1. 2019 மார்ச் 21 ஆந் திகதி நடைபெற்ற COPA குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, திறைசேரிச் செயலாளருக்கு ஹெலிடுவர்ஸ் பங்குகள் மாற்றுவதை இறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுவதுடன் கம்பனியை அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் கம்பனியாக ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் தேவைப்படுத்தப்படுகிறது.

2. அதன்படி, விமானப் படைத் தலைமையலுவலகத்தில் உள்ள ஹெலிடுவர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது ஹெலிடுவர்ஸ் இற்குப் பொருத்தமான வியாபார வகை ஒன்றினை அடையாளம் காணும் பொருட்டு 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி காலை 10 மணிக்கு அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கூட்டமொன்றினை ஒழுங்கு செய்வதற்கு விரும்புகிறது.

3. எனவே, முடியுமான வரை விரைவாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பெயரிடுமாறும் கூட்டத் திகதியை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

4. தங்களின் அவசிய நடவடிக்கைகளுக்காக முன்னிலைப்படுத்தப்படுகிறது.

டி.எல்.எஸ். டயஸ்
எயார் வைஸ் மார்ஷல்
தலைமை அதிகாரி
விமானப் படைத் தளபதிக்காக

**<u>பிற்சேர்க்கை 05</u>**
**<u>திகதி 2019.07…..</u>**
**இலக்கம் MOD/FD/DG(A&F)/AQ/19 கொண்ட கடிதம**

எனது இல: PED/S/HT/1/12(i) திகதி : 2019.04.09

விமானப் படைத் தளபதி
இலங்கை விமானப் படை

**<u>திறைசேரிக்கான கம்பனிப் பங்குகளின் மாற்றம்</u>**
**<u>ஹெலிடுவர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் (PV 72768)</u>**

மேற்படி விடயமாக, தங்களின் SLAF/C.99/6/3/DAO இலக்கமும் 2019.03.27 ஆந் திகதியும் கொண்ட கடிதம் தொடர்பானது,

இந்த விடயம் தொடர்பில் நன்கறிந்த அதிகாரி, இதே தினம் மற்றும் நேரத்தில் முன்னரே ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டத்தில் பங்குபற்றுவதன் காரணமாக 2019.04.10 ஆந் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்குபற்ற முடியாமலுள்ளது என்பதைத் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

இது தொடர்பில் ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.

ஒபபம் : டி.சி.டபிள்யு. ஹப்புகொட
மேலதிக பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் நாயகத்திற்காக

**பிற்சேர்க்கை 06**
**திகதி 2019.07…..**
**இலக்கம் MOD/FD/DG(A&F)/AQ/19 கொண்ட கடிதம**

**வர்த்தக அடிப்படையில் வழங்கப்பட்ட விமானப் போக்குவரத்து வசதிகளுக்காக இலங்கை விமானப் படைக்கு பெற்றுக்கொள்ளப்படவேண்டிய அறிக்கை.ரூபா. 13.47 மில்லியன் நிலுவையை அறவிடுவதற்கான தற்போதுள்ள முன்னேற்றம். - COPA**

| தொடர் இலக்கம் | நிறுவனப் பெயர் | 31.12.2016 இல் நிலுவை(ரூபா.) | 31.12.2017 இல் நிலுவை (ரூபா.) | 18.03.2019 இல் நிலுவை (ரூபா.) | துற்போதுள்ள நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | இறோ லங்கா Ero Lanka (Pvt) லிமிட்டட். | 122,813.47 | 122,813.47 | 122,813.47 | இந்த தனியார் கம்பனிகளிடமிருந்து அறவிடப்படவுள்ள நிலுவை அறவிடுவதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு சட்டமா அதிபரின் திணைக்களத்துக்கு சட்டப் பணிப்பாளர் அனுப்பியுள்ளார். |
| 02 | லயன் எயர் (Pvt) லிமிட்டட். | 3,489,852.50 | 3,489,852.50 | 3,489,852.50 | |
| 03 | கல்வி அமைச்சு | 555,969.60 | 555,969.60 | - | 28 நவம்பர் 2018 இல் கல்வி அமைச்சினால் இலங்கை விமானப் படைக்குச் செலுத்தப்படவேண்டிய நிலுவை தீர்க்கப்பட்டுள்ளது. |
| 04 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 595,570.23 | 595,570.23 | 595,570.23 | 21ஆனி 2018 இல் நடைபெற்ற COPA கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின்படி இலங்கை விமானப்படைக்கு செலுத்தப்படவேண்டிய நிலுவைகளை அறவிடுவதற்காக இந்த அரசாங்க நிறுவனங்களுக்கு விமானப்படை தளபதியின் கையெழுத்துடன் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.<br><br>13 பங்குனி 2019 இல் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தில் இது தொடர்பாக கலந்துரையாடல் நடைபெற்றது. ஆனால் கலந்துரயாடலின் அறிக்கை இன்னமும் இலங்கை விமானப் படைக்குக் கிடைக்கவில்லை. அறிக்கையின் தீர்மானம் கிடைத்ததும் உங்களது பிரிவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 05 | வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு | 836,165.00 | 836,165.00 | 836,165.00 | |
| 06 | பெருந்திட்டம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு | 542,454.59 | 542,454.59 | 542,454.59 | |
| 07 | தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சு | 720,225.52 | 720,225.52 | 720,225.52 | |
| 08 | கடற்தொழில் நீரக வள அபிவிருத்தி அமைச்சு | 75,690.00 | 75,690.00 | 75,690.00 | |

| தொடர் இலக்கம் | நிறுவனத்தின் பெயர் | **31.12.2016 இல் நிலுவை(ரூபா.)** | **31.12.2017 இல் நிலுவை (ரூபா.)** | **18.03.2019 இல் நிலுவை (ரூபா.)** | **தற்போதுள்ள நிலமை** |
|---|---|---|---|---|---|
| 09 | துறைமுகங்கள் மற்றும் விமானசேவை அமைச்சு | 416,002.34 | 416,002.34 | 416,002.34 | துறைமுகங்கள் மற்றும் விமானசேவை அமைச்சுக்கு வழங்கப்பட்ட விமானப் போக்குவரத்து வசதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தொடர்பான ஆவணங்கள் இன்மையால் நடவடிக்கை எடுக்கத் தவறியது.<br><br>13 பங்குனி 2019 இல் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. ஆனால் கலந்துரையாடலின் அறிக்கை இன்னமும் இலங்கை விமானப் படைக்குக் கிடைக்கவில்லை. அறிக்கையின் தீர்மானம் கிடைத்ததும் உங்களது பிரிவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. |
| 10 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 907,816.31 | 907,816.31 | - | F.R 109 இன்படி , 11 மாசி 2019 திகதியிடப்பட்ட கடிதம் இலக்கம் MOD/SUP/9/04/1/2016 ஊடாகவும் 15 பங்குனி 2019 திகதியிடப்பட்ட நிலுவை நிதிப் பணிப்பாளர் சபையால் அனுப்பப்பட்ட கடிதம் இலக்கம் SLAF/325/CA10/HELI/02/2019(05) ஊடாகவும் பாதுகாப்பு செயலாளரின் அங்கீகாரம் நிலுவைகளுக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டது. நிலுவைப் பதிவேடுகளிலிருந்து சொல்லப்பட்ட நிலுவைகள் அகற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| தொடர்பு இலக்கம் | நிறுவனத்தின் பெயர் | **31.12.2016 இல் நிலுவை(ரூபா.)** | **31.12.2017 இல் நிலுவை (ரூபா.)** | **18.03.2019 இல் நிலுவை (ரூபா.)** | **Present position** |
|---|---|---|---|---|---|
| 11 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 1,621,254.34 | 1,621,254.34 | 1,621,254.34 | ரூபா. 4,019,353.99 நிலுவையை அறவிடுவதற்கு அந்தந்த நிறுவனங்களுக்கு அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. 31ஆடி 2018இல் இறுதி அறிவித்தல் இலக்கம் SLAF/99/4/DAO குறிப்பிடப்பட்டது. மேலும், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் நிதி குற்ற விசாரணைப் பிரிவுக்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளைப் பொறுத்து அந்தந்த செய்யப்பட்ட விசாரணைக்காக தேவையான தகவல் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 13 பங்குனி 2019இல் தேசிய வரவுசெலவுதிட்டத் திணைக்களத்தில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. ஆனால் . கலந்துரயாடலின் அறிக்கை இன்னமும் இலங்கை விமானப் படைக்குக் கிடைக்கவில்லை. அறிக்கையின் தீர்மானம் கிடைத்ததும் உங்களது பிரிவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்; |
| 12 | ஜனாதிபதி செயலகம் | 2,398,099.65 | 2,398,099.65 | 2,398,099.65 | |
| 13 | கௌரவ அமைச்சர் சுவாமிநாதன் | 1,009,528.36 | - | - | காசோலை இலக்கம் 114763ஊடாக கௌரவ அமைச்சர் சுவாமிநாதனின் நிலுவை ரூபா. 1,009,528.36 செலுத்தப்பட்டது. மேலும் அதற்கான படிவம் 743 இலக்கம் 188654 05.01.2017இல் வழங்கப்பட்டது. . |
| 14 | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 116,000.00 | - | - | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ரூபா.,116,000.00 நிலுவையில் ரூபா. 58,000.00 03.01.2017 இல் தீர்க்கப்பட்டது. இதற்காக படிவம் 743 இலக்கம் 188649 03.01.2017இல் வழங்கப்பட்டுள்ளது . மிகுதி நிலுவை ரூபா.58,000.00 12.06.2017 இல் தீர்க்கப்பட்டதுடன் அதற்காக படிவம் 743 இலக்கம் 188970 வழங்கப்பட்டுள்ளது. . |

| தொடர் இலக்கம் | நிறுவனத்தின் பெயர் | 31.12.2016 இல் நிலுவை (ரூபா.) | 31.12.2017 இல் நிலுவை (ரூபா.) | 18.03.2019 இல் நிலுவை (ரூபா.) | துற்போதுள்ள நிலுவை |
|---|---|---|---|---|---|
| 15 | சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு | - | 432,535.00 | - | சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் நிலுவை தொகை ரூபா.. 432,535.00 paid on 17.01.2018 இல் செலுத்தப்பட்டதுடன் படிவம் 743 இலக்கம் 189429 18.01.2018. இல் வழங்கப்பட்டது. |
| 16 | சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு | - | 383,488.60 | - | சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் நிலுவை தொகை ரூபா.. 383,488.60 paid on 02.02.2018 இல் செலுத்தப்பட்டதுடன் அதற்காக படிவம்743 இலக்கம் 189477 has been issued on 05.02.2018 இல் வழங்கப்பட்டது.. |
| **மொத்தம்** | | **13,407,442.21** | **13,097,937.45** | **10,818,127.64** | |

**பிற்சேர்க்கை 07**
**திகதி 2019.07…..**
**இலக்கம் MOD/FD/DG(A&F)/AQ/19 கொண்ட கடிதம**

SLAF/477/2/ORG 2019 மார்ச் 29

பணிப்பாளர் நாயகம்
நகர அபிவிருத்தி அதிகாரசபை
செத்சிறிபாய
பத்தரமுல்ல

**விமானப் படை தீயணைப்பு அலகினைத் தாபிப்பதற்கான காணியைக் கையகப்படுத்தல் - 1 ஏக்கர், 0 றூட், 01.50 பேச் (0.4085 ஹெக்ரயர்)**

தொடர்புகள் :

a. அமைச்சரவைத் தீர்மானங்கள் - 2018 ஆகஸ்ட் 8

b. பாராளுமன்றத்தில் 2019 மார்ச் 21 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் குழுவின் வழிப்படுத்தல்கள்

c. பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கான 2019 மார்ச் 25 ஆந் திகதியிடப்பட்ட அரச கணக்குகள் குழுவின் செயலாளரது கடிதம்

1. கொழும்பு நகரில் நாளுக்கு நாள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அடுக்குமாடிக் கட்டடங்களின் நிருமாணம் மற்றும் பெரிய அளவிலான நிருமாணங்கள் ஆகியவற்றுக்குப் பொருத்தமான தீயணைப்புப் பாதுகாப்பை வழங்குவதானது நாட்டில் உடனடித் தேவையாக மாறிவருகிறது. அதற்காக, இலங்கை விமானப் படை ஏற்கனவே நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதுடன் இலங்கை விமானப் படை தீயணைப்பு அலகொன்றினைத் தாபிக்கும் பொருட்டு நாரஹேன்பிட்டி சந்தியில் அமைந்துள்ள பேக்கரியாவத்தை என அழைக்கப்படுகின்ற காணியினை கையகப்படுத்துவதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2. அத்துடன், இந்தக் காணியில் குடியிருக்கும் குடும்பங்களை அகற்றுவதற்காக ரூ. 192 மில்லியன் தொகை நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது. அதற்காக, ஆரம்பத்தில் 50 மில்லியன் ரூபாயை 2019 ஆம் ஆண்டின் பாதீட்டிலிருந்து வழங்குவதற்கும் மீதி 142 மில்லியன் ரூபாயும் 2020 ஆம் ஆண்டின் பாதீட்டிலிருந்து வழங்குவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலும், மேலே தரப்பட்டுள்ள தொடர்பு இல. "C" இன்படி, தீயணைப்பு அலகின் தாபிப்பானது பாராளுமன்றத்தில் 2019 மார்ச் 21 ஆந் திகதி நடைபெற்ற COPA கூட்டத்தில் உடனடித் தேவையொன்றாக அரச கணக்குகள் குழுவின் தலைவரால் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனவே, தீயணைப்பு அலகொன்றினைத் தாபிக்கும் பொருட்டு இலங்கை விமானப் படைக்கு இந்தக் காணியைக் கையகப்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்வதற்கு கட்டளைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

4. அதற்கிணங்க, மேலுள்ள சகல விடயங்களையும் கருத்திற்கொண்டு, நாரஹேன்பிட்டி சந்தியில் இருக்கின்ற பேக்கரியாவத்தை என்ற பெரினைக் கொண்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியை இலங்கை விமானப் படைக்குக் கையகப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குகளைச் செய்யுமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**பி.டி.கே.ரி. ஜயசிங்க**
எயார் வைஸ் மார்ஷல்
நிருவாகப் பணிபாளர்
விமானப் படைத் தளபதிக்காக

**<u>பிற்சேர்க்கை 08</u>**
**<u>திகதி 2019.07…..</u>**
**இலக்கம் MOD/FD/DG(A&F)/AQ/19 கொண்ட கடிதம**

SLAF/C 438/23/LEG 2018 யூன் 22

செயலாளர்
அரச கணக்குகள் மீதான குழு
இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
கோட்டே.

<u>இலங்கை விமானப் படையின் F7 விமானத்திற்குச் சொந்தமான அன்ரெனா ஸ்கேனருடன் கூடிய ராடார் அலைவாங்கி காணாமல் போனமை</u>

தொடர்பு : 2018 யூன் 21 ஆந் திகதி பாராளுமன்றக் கட்டடத்தொகுதியிலுள்ள 06 ஆம் இலக்க அறையில் நடைபெற்ற அரச கணக்குகள் மீதான குழுவின் கூட்டம்

1. இலங்கை விமானப் படையின் F7 விமானத்திற்குச் சொந்தமான அன்ரெனா ஸ்கேனருடன் கூடிய ராடார் அலைவாங்கி காணாமல் போனமை தொடர்பில் அரச கணக்குகள் மீதான குழுவின் தவிசாளரது வழிப்படுத்தலின்படி, ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கையின் இதுவரையான முன்னேற்றமானது கீழே தரப்படுகின்றது.

அ. இத்துடன் இணைப்பு "A" ஆக இணைக்கப்பட்டுள்ள SLAF/C 436/14/LEG என்ற தொடர்பு இலக்கமும் 2015 ஏப்ரல் 17 ஆந் திகதியும் இடப்பட்டு, மேலுள்ள தலைப்பு இடப்பட்டிருந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை இலங்கை விமானப் படை நாடியிருந்தது.

ஆ. 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தில் நடைபெற்ற சிரேஷ்ட அரச சட்ட ஆலோசகர் சுரங்க விமலசேன அவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கட்டளை சட்டத் திணைக்களத்தைச் (CLD) சேர்ந்த படையணித் தலைவர் பி.ஜ. சமரவீர மற்றும் கட்டளைப் பெறுகைப் பிரிவைச் (CPD) சேர்ந்த படையணித் தலைவர் ஆர்.ஜே. பிரியசாந்த ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இ. ஆலோசகைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு, F7 விமானத்தின் காணாமற்போன பொருளானது ஏதாவது பயங்கரவாதக் குழுவின் கைகளில் கிடைக்கப்பெறின் தேசிய பாதுகாப்பிற்கும் உலகளாவிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமைய முடியும் என்பதுடன் நடைபெற்ற நிகழ்வானது விமானப் படையின் விம்பத்தையும் சிதைத்துவிடும் என்பதால் இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (CID) முறைப்பாடு ஒன்றினை பதிவுசெய்யுமாறு சிரேஷ்ட அரச சட்ட ஆலோசகர் ஆலோசனை வழங்கியிருந்தார். எனவே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்வதானது பொருள் இழக்கப்பட்டமைக்கான மூல காரணத்தைக் கண்டுபிடிப்பதை இயலச்செய்யலாம். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புலனாய்வு நடைபெறும் அதே நேரத்தில் சேதங்களுக்கு உரிமைக்கோரிக்கை செய்வதற்காக சரக்கு அனுப்புபவருக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய மீட்சி நடவடிக்கையும்கூட ஆரம்பிக்கப்பட்டது.

ஈ. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, சரக்கு அனுப்புபவருக்கு எதிராக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கும் காணாமற்போன பொருளை கண்டுபிடிப்பதற்கான மேலதிக புலனாய்வுகளைச் செய்வதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு விடயங்களை வழங்குவதற்கும் என கட்டளைப் பெறுகைப் பிரிவானது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்வதற்கு விமானப் படைத் தளபதியின் அங்கீகாரம் 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி வழங்கப்பட்டது. சொல்லப்பட்ட அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதமானது இணைப்பு "B" ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுவதற்கு முன் கட்டளைப் பெறுகைப் பிரிவினால் கட்டளை சட்டத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 2016 மே 31 ஆந் திகதியிடப்பட்ட முறைப்பாடானது இணைப்பு "C" ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள.ளது.

2. தங்களின் தகவலுக்காகவும் அவசியமான நடவடிக்கைக்காகவும் முன்னிலைப்படுத்தப்படுகிறது.

**(எஸ்.என்.எஸ்.என். டயஸ்)**
குழுத் தலைவர்
**சட்டப் பணிப்பாளர்**
**விமானப் படைத் தளபதிக்காக**

SLAF/C 436/14/LEG 2015 யூன் 17

சட்டமா அதிபர்
சட்டமா அதிபர் திணைக்களம்
கொழும்பு 12.

**<u>இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான, காணாமற்போன அனுப்பு பொருள் தொடர்பில் சட்ட ஆலோசனையும் உதவியும்</u>**

1. இலங்கை விமானப் படையானது சீனாவின் பீஜிங்கில் உள்ள வரையறுக்கப்பட்ட சீன தேசிய விமானத் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு விமானத்தின் சில பாகங்களைப் (இதன் பின்னர் அனுப்பு பொருள் என அழைக்கப்படும்) பழுதுபார்ப்பதற்காக அனுப்புவதற்கு உள்நாட்டு சரக்கு அனுப்புநரான கொழும்பு 03, காலி வீதி, இலக்கம் 339 இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்தின் சேவையினைப் பெற்றுக்கொண்டது.

2. சீனாவுக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த அனுப்பு பொருளின் விபரம் கீழே தரப்படுவதுடன் அதன் பெறுமதி 536,000.00 அமெரிக்க டொலர் (புதிய பாகம்) ஆகும்.

அன்ரெனா ஸ்கேனருடன்கூடிய (LRU-01) பூரணமான ராடார் அலைவாங்கி (LRU-02)

3. சீனாவிலுள்ள அதன் சேரும் இடத்திற்கு கூறப்பட்ட அனுப்பு பொருளை கொண்டு போய்ச் சேர்ப்பதற்கான பயணக் கட்டணமாக வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்தினால் அறவிடப்பட்ட வானூர்திக் கட்டணம் ரூ. 19,144.35 ஆகும்.

4. இலங்கை விமானப் படையானது அனுப்பு பொருளை சீனாவுக்கு அனுப்புவதற்காக 2014 ஏப்ரல் 24 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்ததுடன் அதன் பின்னர் அந்த அனுப்பு பொருளை சீனாவுக்கு அனுப்புவதற்காக 2014 ஏப்ரல் 25 ஆந் திகதி விமானம் எயார் ஏசியா X கார்கோ விடம் ஒப்படைத்ததாக கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனம் குறிப்பிட்டிருந்தது. எவ்வாறாயினும் அதன் பின்னர் இந்த அனுப்பு பொருள் சீனாவிலுள்ள அது சேருமிடத்தினைச் சென்றடைந்திருக்கவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அனுப்பு பொருளைப் பெற்றுக்கொள்பவர் உறுதிப்படுத்தியிருந்தார்.

5. அனுப்பு பொருளானது கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில், விமான நிலையத்திலிருந்து விமான நிலையம் என்ற அடிப்படையில் எயார் ஏசியா விமானத்தில் ஏற்றப்பட்டதன் பின்பு, இடைமாற்று மையமாக இருக்கின்ற மலேசியாவின் கோலாலம்பூர் வழியாக சீனாவுக்கு அனுப்பப்பட வேண்டியிருந்தது.

6. காணாமல் போனதாகச் சந்தேகிக்கப்பட்ட மேற்சொல்லப்பட்ட அனுப்பு பொருளானது இலங்கை விமானப் படையின் ராடார் முறைமையில் பயன்படுத்தப்பட்டதுடன் சம்பந்தமில்லாத தரப்பினரின் கைகளில் கொடுக்கப்படக்கூடாததுமான ஓர் உயர் பாதுகாப்புமிக்க இராணுவ உபகரணம் ஆகும்.

7. இலங்கை விமானப் படையானது உள்நாட்டு சரக்கு அனுப்புநரான வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்திடம் அனுப்பு பொருள் உள்ள இடம் பற்றித் தொடர்ச்சியாக விசாரணை செய்திருந்ததாயினும் இவ்விடயம் பற்றிய விமானப் படைக்கான அவர்களது பதில் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

8. எயார் ஏசியா கார்கோவிடம் கையளிக்கப்பட்ட அனுப்பு பொருளானது கோலாலம்பூரில் காணாமற் போயிருந்ததாகவும் அவர்களால் அதன் இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் எயார் ஏசியா சரக்கு விமானம் கூறிய கூற்றின் மீது வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனம் நம்பிக்கை கொண்டிருந்தது. எவ்வாறாயினும் இதனை உறுதிப்படுத்துவதற்கான போதியளவு சான்றுகளை இலங்கை விமானப் படைக்கு வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனம் வழங்காமை காரணமாக இந்தக் கூற்றினை நம்பமுடியாமல் இருக்கிறது.

9. இறுதியில், இலங்கை விமானப் படையானது அனுப்பு பொருள் உள்ள இடத்தினைக் கண்டுபிடிப்பதற்காக மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரின் உதவியைக் கோரியிருந்தது. ஆயினும் அவர்கள் இது தொடர்பில் பல தரப்பினரிடம் விசாரித்தும்கூட அது தோல்வியிலேயே முடிவடைந்தது.

10. கண்காணிப்பு முறைமையின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி, இந்த விமானமானது அனுப்பு பொருளினை கோலாலம்பூரிலுள்ள இடைமாற்று மையத்திற்கும் சீனாவிலுள்ள சேரும் இடத்திற்கும் அனுப்புவதற்கான விமானப் போக்குவரத்து வசதியினைப் பெற முன்பதிவு செய்திருந்தது. ஆயினும் அனுப்பு பொருளானது உரிய இடங்களுக்கு அனுப்பப்படுவதற்காக விமானத்தில் ஏற்றப்பட்டமை தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கான எவ்வித சான்றுகளும் காணப்படவில்லை.

11. அனுப்பு பொருள் உள்ள சரியான இடத்தினைக் கண்டுபிடிப்பதற்காக இ.வி.ப. இனால் செய்யப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் தோல்வியையே தழுவியிருந்தது. எவ்வாறாயினும், அனுப்பு பொருளை விமானப் படையிலிருந்து பொறுப்பெடுத்த சரக்கு அனுப்புநர் அப்பொருள் காணாமற் போனமை பற்றி எவ்வித சரியான காரணத்தையும் தெரிவிக்கவில்லை என்றபோதிலும் காணாமற்போன அனுப்பு பொருளுக்கான நட்டஈட்டினை காப்புறுதியின் ஊடாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். இலங்கை விமானப் படையானது சரக்கு அனுப்புநரிடமிருந்து நட்டஈட்டை ஏற்றுக்கொள்வதற்கான எவ்வித எண்ணத்தையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில், சரக்கு அனுப்புநர் அனுப்பு பொருளின் காப்புறுதிப் பெறுமதிக்குச் சமனான தொகை நட்டஈட்டினைக் கொடுப்பனவு செய்வதற்கு மாத்திரமே எண்ணியிருந்தார். ஆயினும் சொல்லப்பட்ட காப்புறுதித் தொகையானது காணாமற்போன அனுப்பு பொருளின் உண்மையான பெறுமதியை விட மிகவும் குறைவானதாகும்.

12. விலைமனுக் கோரலின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பந்தி இல. 02 இன்படி, அனுப்பு பொருளில் ஏதாவது சேதம் ஏற்படல், இழப்பு அல்லது காணாமற்போதல் போன்றவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் அந்தக் காணாமற்போன பொருளுக்கான முழுப் பொறுப்பையும் சரக்கு அனுப்புபவரே ஏற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய விலைமனுக்கோரல் படிவம் இணைப்பு "A" ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. இந்தச் சந்தர்ப்பத்தில், இந்தக் கப்பலேற்றல் நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட உரிய தரப்புகளிடமிருந்து இழப்பு ஏற்பட்ட அனுப்பு பொருளின் பெறுமதியை வசூலிப்பதற்கு தங்களின் சட்ட ஆலோசனையையும் உதவியையும் வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

14. தங்களின் தகவலுக்காகவும் அவசியமான நடவடிக்கைகளுக்காகவும் தயவுடன் முன்னிலைப்படுத்தப்படுகிறது.

(எஸ்.என்.எஸ்.என். டயஸ்)
விங் கொமாண்டர்
சட்டப் பணிப்பாளர்
விமானப் படைத் தளபதிக்காக

தளர் குறிப்பு

PD/1360/1/EQ (SR/8036)

**CMDR**

ஊடாக : **DL**

<u>இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான, காணாமற்போன அனுப்பு பொருள் தொடர்பான நடவடிக்கை</u>

தொடர்புகள்:

A . விலைமனுக் கோப்பு AHQ/14/LS BRK/1022 (SR-8036)

B. AHQ/14/LS BRK/1022 இன் M-04 சட்டப் பணிப்பாளரின் குறிப்பு

1. அன்ரெனா ஸ்கேனருடன் (LRU-01) கூடிய ராடர் அலைவாங்கி (LRU-02) ஒன்று வெளிநாட்டுப் பழுதுபார்ப்புக்காக அதனை அனுப்பும் செயன்முறையின்போது காணாமற் போயிருக்கிறது. அதன் விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள "இணைப்பு A" இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

2. இலங்கையின் கொழும்பிலுள்ள வரையிறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்தின் உள்நாட்டு சரக்கு அனுப்புநரின் பிரதிநிதி ஒருவருடன் ASD ஏற்றுமதி உத்தியோகத்தரின் விடய எழுதுநரால் 2014 ஏப்ரல் 25 ஆந் திகதி BIA இல் குறித்த அனுப்பு பொருளின் ஏற்றுமதிச் சுங்க அனுமதி பெறப்பட்டதுடன் சீனாவின் பீஜிங்கிலுள்ள (வரையறுக்கப்பட்ட சீன தேசிய விமானத் தொழில்நுட்பவியல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம், சீனா) இறுதிச் சேருமிடத்திற்கு அனுப்பு பொருளினை அனுப்புகின்ற நோக்கத்திற்காக BIA சரக்கு முனையத்தில் அனுப்பு பொருள் கையளிக்கப்பட்டது.

3. எவ்வாறாயினும், இறுதிச் சேருமிடத்தினை (வரையறுக்கப்பட்ட CATIC) பொருள் சென்றடைந் திருக்கவில்லை என்பது PD இன் பின்தொடர் செயன்முறையின்போது தெரியவந்ததைத் தொடர்ந்து PD ஆனது சரக்கு அனுப்புநர் மற்றும் விமானசேவை நிறுவனம் ஆகிவற்றிடம் விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

4. சரக்கு அனுப்புநர் மற்றும் விமானசேவை நிறுவனத்தினரிடமிருந்து (எயார் ஏசியா சரக்கு விமானசேவை) பெறப்பட்ட தகவல்களின்படி, குறித்த பொருளானது கோலாலம்பூரில் காணாமற் போயுள்ளதாகவும் அத்திகதி வரை அது இருக்கின்ற இடத்தினைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் தெரியவந்தது. மேலும், எயார் ஏசியா சரக்கு விமான பீஜிங் சரக்கு இறக்கும் முனைய அலுவலகம்கூட இந்த அனுப்பு பொருள் தங்களது சரக்குக் களஞ்சியத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியிருந்தது. மேலும், PD ஆனது சரக்கு அனுப்புநர் மற்றும் விமான நிறுவனம் ஊாக தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொண்டிருந்ததுடன் காணாமற்போன அனுப்பு பொருள் உள்ள இடத்தினைக் கண்டுபிடிப்பதற்காக மலேசியாவிலுள்ள இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் உயர்ஸ்தானிகரிடமிருந்தும் உதவி நாடப்பட்டிருந்ததாயினும் இதுவரை அது தோல்வியையே தழுவியிருந்தது.

5. எவ்வாறாயினும், சரக்கு அனுப்புநரான வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனம் குறித்த அனுப்பு பொருள் உள்ள இடத்தினைக் கண்டுபிடிப்பதில் அதிக அக்கறை காட்டியிராத அதே வேளை அவர்கள் தங்களது காப்புறுதி ஊடாக நட்டஈட்டுக் கோரிக்கைக்குப் பரிந்துரைத்தனர். இந்தக் காப்புறுதித் தொகை (அதாவது MYR 1801.33 = LKR 63163.02) அனுப்பு பொருளின் உண்மையான பெறுமதியைக் காட்டிலும் மிகவும் குறைவான ஒரு தொகையாகும்.

6. மேலும், சரக்கு அனுப்புநரால் பரிந்துரைக்கப்பட்ட காப்புறுதிக்கு உரிமைக்கோரிக்கை செய்வதற்கு முன்பாக அனுப்பு பொருள் உள்ள இடத்தினைக் கண்டுபிடிப்பதற்கு PD ஆனது சாத்தியமான எல்லா முயற்சிகளையும் எடுத்திருந்தமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். பொருளின் பணப் பெறுமதிக்கு அப்பால் குறித்த பொருள் உள்ள இடத்தினைக் கண்டுபிடிப்பதற்கு எடுக்கப்பட்ட மதிப்பார்ந்த எந்த முயற்சியும் எந்தவொரு சம்பந்தமற்ற தரப்பினரின் கைகளிலும் ராடார் பொருள் சேருவதைத் தடுப்பதை நோக்காகக் கொண்டிருந்தன.

7. இதனைத் தொடர்ந்து, சரக்கு அனுப்புநரான வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்திற்கு எதிராக முறையான சட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு 2015 ஏப்ரல் 07 ஆந் திகதி சட்டப் பணிப்பாளரிடம் இவ்விடயம் அனுப்பப்பட்டதுடன் சட்டப் பணிப்பாளர் இது தொடர்பில் சட்ட ஆலோசனையை எதிர்பார்த்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு இதனை அனுப்பியிருந்தார். மேலும், இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு இ.வி.ப. இன் உயர்மட்ட அதிகாரிகளின் உரிய அனுமதியுடன் CID யிற்கு விடயத்தைப் பாரப்படுத்துமாறு சட்டப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

8. மேலும், PD ஆனது இ.வி.ப. காப்புறுதிச் செயன்முறைக்கான DPC அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டிருந்தபோதிலும், அவற்றுக்கான காலம் கடந்திருந்ததன் காரணமாக வெளிநாட்டுப் பழுதுபார்ப்பு மற்றும் சேவைகள் பகுதியினால் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பது பின்னர் தெரியவந்தது. இதன் காரணமாக இவ்விடயம் தொடர்பில் காப்புறுதிக்கான உரிமைக் கோரிக்கையினைச் செய்வதற்கு இ.வி.ப. இனால் இயலாமற் போயிருந்தது.

9. எனவே, இந்தச் சூழ்நிலையில் எடுக்கப்படக்கூடிய பின்வரும் நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

a. சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளல்

   i. சரக்கு அனுப்புநரிடமிருந்து பொருளுக்கான மொத்தப் பெறுமதியையும் மீளப் பெறுவதற்கான சாத்தியத்தினை ஆராய்வதற்கு சரக்கு அனுப்புநரான வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்திற்கு எதிராக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல்

   ii. இது ஒரு தடைசெய்யப்பட்ட பொருள் என்ற ரீதியில் காணாமற்போன பொருள் இருக்கின்ற இடத்தினைக் கண்டுபிடிப்பதற்கான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக விடயத்தினை CID இற்குப் பாரப்படுத்தல்

b. மேலே பந்தி 8 இல் உள்ளடக்கப்பட்டுள்ள இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு விசாரணை நீதிமன்றமொன்றை அமைத்தல்

10. தங்களின் மேலான பார்வைக்காகவும் அவசியமான நடவடிக்கைகளுக்காகவும் தயவுடன் முன்னிலைப்படுத்தப்படுகிறது.

(எஸ்.எம்.எஸ்.பி. கொஸ்வத்த)
குழுத் தலைவர்
**பிரதான பெறுகை உத்தியோகத்தர்**

20 யூலை 15

PD/C.34/1/P1 2016 மே 31

பணிப்பாளர்
குற்றப் புலனாய்வுப் பிரிவு
4 ஆம் மாடி,
புதிய செயலகக் கட்டடம்,
கொழும்பு.

<u>குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாட்டைப் பதிவுசெய்தல்</u>

1. சீனாவுக்கு அனுப்பப்படும்போது காணாமற் போயிருந்த இலங்கை விமானப் படையின் F-7 விமானத்திற்குச் சொந்தமான ராடார் அலைவாங்கி தொடர்பில் தங்களது பிரிவுக்குச் செய்யப்பட்ட வாய் மூல முறைப்பாட்டை எழுத்து மூலம் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டமைக்கமைய, எழுத்து மூல முறைப்பாடு இத்துடன் இணைக்கப்படுகின்றது.

2. தங்களின் அவசிய நடவடிக்கைக்காக தயவுடன் முன்னிலைப்படுத்தப்படுகிறது.

**(எஸ்.எம்.எஸ்.பி. கொஸ்வத்த)**
குழுத் தலைவர்
**பிரதான பெறுகை உத்தியோகத்தர்**

குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாட்டைப் பதிவுசெய்தல்

இலங்கை விமானப் படையால் பயன்படுத்தப்பட்ட F-7 விமானத்தின் ராடார் முறைமைக்குச் சொந்தமான பொருள் செயற்பாடற்றுக் காணப்பட்டதால் அதனைப் பரீட்சிப்பதற்காகவும் அதன் பழுதுபார்ப்புக்கான செலவினை மதிப்பிடுவதற்காகவும் என அதன் தயாரிப்பாளரான சீனாவின் CATIC இற்கு அதனை அனுப்புவதற்காக 2013 டிசெம்பர் 03 ஆந் திகதி DPC இன் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட கடிதம் "இணைப்பு A" ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

CATIC இனால் செய்யப்பட்ட கோரிக்கையின்பேரில், சீனாவுக்கு குறித்த பொருளை அனுப்புவதற்காக முறையான சரக்கு அனுப்புநர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக 2014 பெப்ரவரி 05 ஆந் திகதி இலங்கை விமானப் படையால் விலைமனு கோரப்பட்டது. இதன்படி, இந்நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டது. வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கட்டளைப் படிவம் "இணைப்பு B" இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ராடார் அலைவாங்கியானது சுங்க அனுமதியின் பின்னர் BIA இலுள்ள ஸ்ரீ லங்கன் கார்கோ விலேஜ் இல் 2014.04.24 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. எம்.ஏ.எஸ். பெர்னாண்டோவிடம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர், சீனாவுக்கு ராடார் அலைவாங்கியை அனுப்புவதற்கான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்திற்குக் காணப்பட்டது. வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டு அவர்களால் பொறுப்பேற்கப்பட்டதை அறுதியீடு செய்யும் கையொப்பமிடப்பட்ட கடிதத்தின் பிரதி "இணைப்பு C" ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ராடர் அலைவாங்கி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என 2014 மே 25 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக CATIC இனால் இலங்கை விமானப் படைக்கு அறிவிக்கப்பட்டது. இக்கடிதம் "இணைப்பு D" ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப் படை 2014 யூன் 19 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்திடம் ராடார் அலைவாங்கியானது அதன் இறுதி சேருமிடத்தை அடையாமை பற்றி விசாரித்தது. ஆயினும் அவர்களிடமிருந்து எவ்வித திருப்திகரமான பதில்களும் கிடைக்கப்பெறாததுடன் ராடார் அலைவாங்கியானது கோலாலம்பூரில் காணாமற்போயிருப்பதாக 2014 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அறிவிக்கப்பட்டது. அந்தக் கடிதம் "இணைப்பு E" ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த ராடார் அலைவாங்கியின் பெறுமதி ஏறத்தாழ 536,000.00 அமெரிக்க டொர் என்பதுடன் இது ஏதாவது பயங்கரவாதக் குழுவின் கைகளில் சிக்கியிருப்பின் அது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவும் அமையும். இந்த இரு விடயங்கள் காரணமாக, இலங்கை விமானப் படையானது இந்தப் பொருளை எவ்வாறாவது கண்டுபிடித்துத் தருமாறு வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) நிறுவனத்தை நிர்ப்பந்தப்படுத்தியிருந்த போதிலும் அவர்கள் இது தொடர்பில் அதிக அக்கறை காட்டாததுடன் உரிய பொருளை சீனாவுக்குக் கொண்டு சென்ற எயார் ஏசியா X கார்கோவிடம் முறைப்பாடு செய்யுமாறும் தெரிவித்திருந்தனர்.

பின்னர், சரக்கு அனுப்புநர் ராடார் அலைவாங்கியின் தேடுதலை கைவிட்டிருந்தார். பொருளின் பெறுமதி மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு அதனால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, இவ்விடயம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய சரக்கு அனுப்புநரான வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக் (தனி) கம்பனியை அழைத்து முறையான விசாரணை ஒன்றினை நடாத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.